நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 135/2022

## P.W. 1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | அமிர்தம் |
| தந்தை / கணவர் பெயர் | : | சேட்டு |
| கிராமம் | : | சீரங்கனூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 40 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 26–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.52PM)

1. நான் தற்போது சீரங்கனூர் பேருந்து நிறுத்தத்துக்கும் எனது வீட்டுக்கும் சுமார் ஒரு கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையம் சென்றேன். நான் மட்டும் தனியாகத்தான் காவல் நிலையத்துக்கு சென்றேன். எனது கணவரும் மகனும் உடன் வரவில்லை.

அதன்பண்ணிட்டும் எனது கணவரும் மகனும் இந்த வழக்கு சம்பந்தமாக ஒருபோதும் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான்.

2. எனது கணவரையும் மகனையும் நான் மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்க்கவில்லை. நான் காவல் நிலையம் செல்லும் போது எதிரிகளும் அவர்களது குடும்பத்தாரும் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரை போலீசார் தான் எழுதினார்கள். அந்த புகாரை நான் படித்துப் பார்க்கவில்லை. ஆனால் நான் சொன்னதைத்தான் எழுதினார்கள். நான் காலை 7:30 மணிக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

3. எனது வீட்டில் இருந்து நங்கவள்ளி காவல் நிலையம் சுமார் 10 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் எங்களுக்கும் நிலம் சம்பந்தமான பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். நில பிரச்சினை சம்பந்தமாக நான் எந்த உரிமையியல் வழக்கும் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் நான் ஒரு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அது தள்ளுபடி ஆன காரணத்தால் எதிரிகளிடமிருந்து நிலத்தை பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் புகார் அளித்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனது கணவருக்கு மேல் வரிசை பற்கள்தான் விழுந்தது. இரண்டு பற்கள் விழுந்துவிட்டது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதிக்கு பல வருடங்களுக்கு முன்பாகவே பற்கள் விழுந்து விட்டது என்றாலும் அந்த பற்களை கட்டுவதற்காக நாங்கள் எடுத்து வைத்துள்ளோம் என்றாலும் சரியல்ல. பிரச்சினை காரணமாக ஏற்கனவே விழுந்த பற்களை நாங்கள் எடுத்து வைத்துக் கொண்டு நாங்களே சுயமாக சில காயங்களை ஏற்படுத்திக் கொண்டு பொய் புகார் அளித்து பொய் சாட்சி அளிக்கிறோம் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது கணவரின் தம்பி மற்றும் தம்பி மகன்கள் என்றால் சரிதான். அவர்களுடன் கடந்த நான்கு வருடமாக பேச்சுவார்த்தை இல்லை.

5. செல்வம் அடித்து தான் எனது மகனுக்கு காயம் ஏற்பட்டது என்று காவல்துறை விசாரணையில் சொல்லி உள்ளேன். எதிரி குமார் எனது முதுகில் அடித்து ஜாக்கெட்டை கிழித்து விட்டார் என்று வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் எனது கணவர் மற்றும் மகன் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் 10 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். எனது கணவரும் மகனும் சிகிச்சையில் இருந்த போது போலீசார் வந்தார்கள் ஆனால் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது.

6. ராஜா பூபதி முருகன் லோகநாதன் சுரேஷ் ஆகிய அனைவரும் எங்களது நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான் ஆனால் தொலைவில் உள்ளார்கள். எதிரிகள் அவர்களது காட்டை உழவு செய்ய டிராக்டர் கொண்டு வரும்போது நானும் எனது கணவரும் தடுத்து பிரச்சினை செய்தோம் என்றால் சரிதான் நாங்கள் அளந்து விட்டு ஓட்டலாம் என்று சொன்னோம். எதிரிகளின் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நடந்ததாக சொல்லும் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நாங்கள் தகராறு செய்வதாக காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றாலும் நாங்கள் காவல்துறையினரின் துணையுடன் அவர்களது புகாரினை பதிவு செய்யாமல் நாங்கள் ஒரு பொய் புகார் அளித்து வழக்கு பதிவு செய்து கொண்டால் சரியல்ல

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-02.03PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**